பத்திரிக்கை செய்தி

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை

திருப்பத்தூர் மாவட்டம்.

திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட, அரசு மருத்துவமனை – CEmONC மையங்களில் (SNCU மற்றும் PICU உட்பட) புதிதாக உருவாக்கபட்ட 54 ஒப்பந்த செவிலியர்களின் பணியிடங்களை முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் (ரூ.21,000 / மாதம்) மாவட்ட நல சங்கம் மூலமாக நிரப்பிட **20.11.2026 அன்று முதல் 04.12.2026 அன்று மாலை 5.00 மணி வரை** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தகுதியான செவிலியர்கள் விண்ணப்பங்களை மாவட்ட இணையதளம் மூலமாக (https://tirupathur.nic.in) பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தகுந்த சுய சான்றொப்பமிட்ட , பத்தாம் வகுப்பு, 12 ம் வகுப்பு தேர்ச்சி மதிப்பெண் சான்றிதழ் , செவிலியர் படிப்பின் (B.Sc Nursing / GNM) அனைத்து கல்வியாண்டுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்கள் (Mark sheets of all years) , தமிழ்நாடு செவிலியர் கவுன்சில் பதிவு சான்றிதழ், இருப்பிட சான்று (ஆதார் அடையாள அட்டை, / வாக்காளர் அடையாள அட்டை/ குடும்ப அட்டை) மற்றும் சாதிச்சான்றிதழ் , முன்னுரிமை சான்று (Differently abled, Transgender, Destitute Widow) ஆகியவற்றுடன் இணைத்து மாவட்ட சுகாதார அலுவலர், மாவட்ட சுகாதார அலுவலகம், சேர்மன் லட்சுமணன் தெரு, நகராட்சி அலுவலகம் எதிரில், திருப்பத்தூர், 635601 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் (Post) வாயிலாக விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் முன்னதாக அறிவிக்கப்பட்ட செவிலியர் (Staff Nurse) பணியிடத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள், இப்பணியிடங்களுக்குப் பொருந்தாது. இப்பணியிடங்களுக்கு புதிய விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட சுகாதார அலுவலர்
திருப்பத்தூர் மாவட்டம்

மாவட்ட ஆட்சியர்
திருப்பத்தூர் மாவட்டம்